Bodhi International Journal of Research in Humanities, Arts and Science

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

# அறவியல் நோக்கில் அரிசில்கிழார் பாடல்கள்

**சு.கோமதி அழகு**

உதவிப்பேராசிரியர், தமிழியல்துறை, ஸ்ரீகாளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி

Open Access

Manuscript ID:
BIJ-SPL4-Jan26-MD-143

Subject: Tamil

Received : 03.09.2025
Accepted : 22.01.2026
Published : 31.01.2026

DOI: 10.64938/bijsi.v10si4.26.Jan143

Copy Right:

This work is licensed under
a Creative Commons Attribution-
Share A like 4.0 International License.

**ஆய்வுச்சுருக்கம்**

*சான்றான்மையும் மாண்பும் மிக்க சங்கப் புலவர்களுள் அரிசில்கிழார் குறிப்பிடத்தக்கவர் ஆவார். தாம் சார்ந்து வாழும் வள்ளல் பெருமக்களாகிய வேந்தர்களையும் இனக்குழு தலைவர்களையும் அறவழியில் அணுகி அறவழியில் ஆட்சி செலுத்தவும் தனிமனித ஒழுக்கம் சிதையாமல் காக்கவும் அவர் மேற்கொள்ளும் முயற்சிகளை புறநானூறு வழி காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**திறவுச்சொற்கள்: அறவியல், அறவுரை, அரிசில்கிழார், கடையெழு வள்ளல்கள், பேகன்**

## அறவியல் விளக்கம்

அறவியல் அணுகுமுறைகள் குறித்து அறிஞர் பலரும் பல்வேறு விளக்கங்களையும் வரையறைகளையும் கொடுத்துள்ளனர். அவ்வகையில் தி.சு.நடராசன் அவர்கள் "நல்லது - கெட்டது; தீங்கற்றது - தீங்கானது;ஏற்புடையது - ஏற்புடையது அல்லாதது என்ற முறையில் மனிதாபிமான உணர்வும் பிறருக்கு கேடற்ற நடத்தையும் சமுதாய நல்லுணர்வோடு தனிப்பட்ட தனி மனிதனின் மனநலனும் கூடி வருகிற ஒரு விழுமியத்தைத்தான் அறவியல் குறிப்பிடுகிறது"1என்று விளக்கம் அளிக்கின்றார். அரிசில்கிழாரின் பாடல்களிலும் இத்தகைய மனிதாபிமான உணர்வும் சமுதாய நலனோடு கூடிய தனிமனித மனநலனும் காக்கின்ற பொருண்மைகளைக் காணமுடிகிறது.

## இல்லற மாண்பு காக்க வலியுறுத்துதல்

கடையெழு வள்ளல்களில் ஒருவரான வையாவி கோப்பெரும்பேகம் தன் மனைவியின் மனம் வருந்தும்படியாக பிரிந்து வாழ்வதனை அறிந்த அரிசில் கிழார் பேகனை நாடி பரிசில் வேண்டும்

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

பொழுது தம் குடி வறுமையினைப் போக்கும்படியாக பொன்னோ பொருளோ வேண்டாமல் பேகன் தன் மனைவியுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்ற பரிசினை வேண்டி நிற்கின்றார். இதனை,

**"………… என்னை நயந்து**
**பரிசி னல்குவை யாயிற் குரிசினீ**
**நல்கா மையினைவரச் சாஅ**
**யருந்துய ருழக்குநின் திருந்திழை யரிவை**
**தண்கமழ் கோதை புனைய**
**வண்பரி நெடுந்தேர் பூண்கநின் மாவே"**

**(புறம் -146:4-11)**

என்ற பாடல் அடிகளால் அறிய முடிகிறது. பலரும் விரும்பி வந்து தம் வறுமையைத் தீர்த்துக் கொள்ளும் வள்ளலாக விளங்கும் பேகனின் அருள் ஆனது அவனது மனைவிக்கு கிடைக்காமல் அவள் வாடி நிற்கும் சூழலை அழகாக காட்சிப்படுத்துகிறார் புலவர். பேகனின் மனைவி விரிந்த மயில் தோகை போல பறந்து கிடக்கும் கூந்தலை அள்ளி முடிந்து மணம் வீசும் புகையினை இட்டு குளிர்ந்த மணம் கமழும் மாலையினை மகிழ்ந்து அணியும் படியாக விரைந்து செல்லும் குதிரையை உன்னுடைய தேரில் பூட்டுவாயாக என பேகனிடம் வேண்டுகிறார். மேலும் தமக்கான பரிசாக பேகன் மனைவியின் துன்பம் துடைத்து வாழ வேண்டும் என்பதையும் மனைவியின் நிலை என்ன என்பதையும் நயம்பட விளக்கிச் செல்கிறார். பொருளுதவி வேண்டிய வறுமையுற்றோர் தம் வாழ்நாளுக்கு வேண்டிய பொருளை விரும்பி நிற்பது இயல்பு. ஆனால் அரிசில் கிழார் தமக்கான பொருளைக் காட்டிலும் தாம் விரும்பும் மதிப்பு மிக்க மன்னன் தன் மனைவி மக்களுடன் மகிழ்ந்து வாழ வேண்டும் என எண்ணுவது அவரது இல்லறம் பற்றிய விழுமியத்தை உணர்த்துவதாய் உள்ளது.

மன்னனின் குடும்பச் சூழல் என்பது தனிப்பட்டது. பிறர் தலையிடுதல் நாகரீகம் அற்ற செயல் என விலகி நிற்காமல் தாம் விரும்பும் மன்னனின் இல்லறம் சிறந்து விளங்க வேண்டும் என அவனுக்கு அவனுடைய அன்பு கிட்டாத மனைவியின் நிலையினைக் கூறுவதும் தமக்கு பரிசிலாக உன்னுடைய அன்பானது உனது மனைவிக்கு கிடைக்க வேண்டும் என வலியுறுத்துவதும் பாராட்டுவதற்குரிய செயலாகிறது. பலருக்கும் அன்புடையவனாய் விளங்கும் பேகனின் அன்பு அவனுடைய மனைவிக்கும் கிடைக்க வேண்டும் என புலவர் இல்லற மாண்பினை உணர்ந்தவராக நின்று வலியுறுத்திச் செல்கிறார். வெறுமனே பரிசில் வேண்டிப் பாடும் புலவராக இல்லாமல் பண்பில் சிறந்த சான்றோராய் பேகனுக்கு இல்லறம் காக்கும் கடமையினை எடுத்துரைப்பது அரிசில் கிழார் பேகனிடம் காட்டும் அன்பறமாகும். அறவழியில் புலவர் மன்னனை சரியான காலத்தில் நெறிப்படுத்தும் பண்புடையவராய் உணர்ந்து செயல்பட்டுள்ளார்.

**நன்றி மறவாமை**

போரில் விழுப்புண்பட்ட வீரர்களை அடைக்கலமாக ஏற்று புண்ணை ஆற்றி பாதுகாப்பது பண்டைத் தமிழர்களின் மரபாக உள்ளது. நிலையாமை நிறைந்த உலகில் புண்பட்ட வீரனை காக்க வேண்டும் என்ற இரக்க உணர்வு கொண்ட அரிசில்கிழார் தாம் விரும்பி மதிக்கின்ற வீரக்கழல் அணிந்த வீரனின் புண்ணைக் காக்கத் துணைவருமாறு தம் தோழியினை அழைப்பது போல பாடியுள்ள புறநானூறு பாடல் புலவரின் அருள் உணர்வினைக் காட்டுவதாக உள்ளது.

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

**"இசைமணி யெறிந்து காஞ்சி பாடி**
**நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்**
**காக்க வம்மோ காதலந் தோழி**
**வேந்துறு விழுமந் தாங்கிய**
**பூம்பொறி யுடைய நெடுந்தகை புண்ணே"**

**(புறம் -281:5-9)**

என்ற இப்பாடல் அடிகள் பெண் ஒருத்தி தன் தோழியினை அழைத்து வீரனின் புண்ணைக் காக்கும் பணியில் ஈடுபட்டதை காட்டுகின்றன. வீரத்தை முதன்மைப் பொருளாகக் கொண்ட புறப்பொருளில் புண்பட்ட வீரனைக் காக்கும் செயலைக் குறிப்பிடுவது பேய்க்காஞ்சி என்னும் துறையாகும். குருதி மணக்கும் புண்ணுடைய வீரனின் புண்ணை பேய்கள் தீண்டுவதும் அவனை அச்சுறுத்துவதும் அப்பெய்களிடமிருந்து புண்பட்டவரைக் காப்பதுமாகிய செய்திகளைக் கூறுவது பேய்க்காஞ்சியாகும்

இரத்த காயங்களுடன் காக்கப்பட வேண்டிய வீரர்கள் தங்கி உள்ள பாசறைகளின் முகப்பில் இரவம் என்னும் இருள் மரக்கிளையினையும் வேம்பினையும் செருகி மங்கல இசைக் கருவிகளை இசைத்து பாசறையினை மெழுகி வெண் சிறு கடுகு தூவி புகையிட்டு ஆம்பல் குழலை இசைத்துப்பாடி மணி ஒலிக்கச் செய்து காஞ்சிப்பண்ணை பாடி வீரர்கள் தங்கி உள்ள நகர் முழுவதும் நறுமணப் புகையினை மணக்கச் செய்து பேயாகிய தீங்கிலிருந்து புண்பட்டவர்களைக் காப்பது மரபாகும். அவ்வகையில் அரிசில் கிழார் தாம் மதித்து வணங்கும் பூவேலைப்பாடு உடைய கழல் அணிந்த வேந்தனுக்கு ஏற்பட்ட புண்ணாகிய இன்னலைத் தீர்க்க மேற்கொள்ளும் முயற்சிகளைக் காண முடிகிறது. காயம் பட்ட வரை காக்கும் செவிலியின் மனப்பான்மையினை அரிசில் கிழாரிடம் காண முடிகிறது.

**புலவருள் சால்புடையவர்**

புலவர்களின் புகழ் மொழிக்காகவே வேந்தர் பலரும் பல்வேறு அறச்செயல்களையும் வீர தீர செயல்களையும் செய்துள்ளமையை இலக்கியங்கள் சுட்டுகின்றன. புலவர்களால் மன்னன் புகழப்படுவது மிகப்பெரிய பேறாக கருதிய காலத்தில் அரிசில் கிழார் மனிதாபிமான இயல்புடன் செயல்பட்டமையை புறநானூறு 285 ஆம் பாடல் காட்டுகிறது. பகைவர்களின் அம்புகளால் துளைக்கப்பட்ட மார்பினை உடைய தலைவனின் உடல் புண் உண்டான கழலோடு நிலத்தில் சாய்ந்தது குற்றியுரும் கொலை உயிர்மாக கிடக்கும் தலைவனின் நிலையை கண்டு இரங்கி வருந்தும் அனைவரும் கலங்கி நின்றனர். இறக்கும் தருவாயில் உள்ள தலைவனின் மனக்கருத்தினை உணர்ந்தவர்கள் போல கதிர்கள் பின்னி கிடக்கின்ற வளமான மருத நிலத்தை கொடுத்து விட்டதால் வறுமையுற்ற இரவலர் தலைவனுக்கு ஓர் கரம்பை சீரூரைக் கொடுத்தவன் அல்லனோ என புகழ்ந்து உரைக்க அவன் தலை தாழ்ந்து மன அமைதி உடையவனாய் உயிர்நீத்தான் என அரசியல் கிளார் குறிப்பிடுகின்றார் இங்கு இறந்தபடும் நிலையில் உள்ள மன்னன் தான் வாழும் காலத்தில் புலவரால் புகழப்படும் செயல்களை செய்து செம்மையானதொரு வாழ்வினை வாழ்ந்தோம் என மன அமைதி கொண்டு தமது இறுதி மூச்சினை நிறுத்திக் கொள்ளட்டும் என்ற உயர்ந்த மனிதநேய சிந்தனை இங்கு வெளிப்படுவதைக் காண முடிகிறது. வாழும் காலத்தில் மன்னனை பரிசில் வேண்டி வாழ்த்தி பாடுவது பயன்கருதிய செயலாகும் ஆனால் இங்கு அரிசில்கிழார் இறக்கும் தருவாயில் உள்ளவனைப் புகழ்ந்து அவனை சால்புடையவனாய் மன அமைதி அடையச் செய்தமை புலவர்களுள் சால்புடையவராய் அரில்கிழாரை அடையாளப்படுத்துகிறது.

**கையறு நிலை**

இரவலர்கள் தங்களை புரந்து வாழும்

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

புரவலர்களின் பிரிவினை ஆற்றாமல் வருந்தி அழும் காட்சிகளை இலக்கியங்கள் பல இடங்களிலும் காட்டுகின்றன. புரவலரை இழந்த காலத்தில் அவரை எண்ணி புலம்பி அழும் பொழுது அடுத்தடுத்து உவமைகளால் ஒப்பிட்டு உயர்த்தி கூறுவது மனித இயல்பு அத்தகைய இயல்பினை அரிசில்கிழாரிடம் காண முடிகிறது. அதியமானின் மகன் எழினி போர்க்களத்தில் பொருது மடிந்தான் இதனைத் தாங்க இயலாத இரவலர்கள் வருந்தி புலம்பும் நிலையினை புலவர் காட்சிப்படுத்தும் விதம் அவர்தம் பாடலைப் படிக்கும் தோறும் கையறுநிலை மனப்பான்மையினைக் கொணர்வதாய் உள்ளது.

தாயை இழந்த குழந்தை போல தன்னோடு கூடிய சுற்றம் இடம் தோறும் வருந்தி மிகுந்த பசியுடனும் கலக்கத்துடனும் துன்புற்று கிடப்பதை விட கூற்றமே நீ மிகப்பெரியதை இழந்து விட்டாய். அறமற்ற கூற்றுவனே எழினியை வீழ்த்திய உனது செயல் வாழ்தலுக்கு காரணமாக வரும் வயலிடம் விளையும் வருவாயை அறியாத தாழ்குடி உழவன் விதையை உண்டது போல இந்த ஒருவனது உயிரை நீ உண்ணாமல் இருந்திருந்தால் பகைவருடைய பல உயிர்களையும் அவன் போரில் கொல்லும் களத்தில் உண்டிருக்கலாம் என கூற்றுவனை தாழ்குடி உழவனுக்கு உவமை கூறி வருந்தும் மனநிலையானது புலவரின் கையறு நிலையினைப் படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது. இதனை,

> **“கடும்பசி கலக்கிய விடும்பைகூர் நெஞ்சமொடு**
> **நோயுழந்து வைகிய வுலகினு மிகநனி**
> **நீயிழந் தனையே யறனில் கூற்றம்**
> **வாழ்தலின்வரூஉம் வயல்வளன் அறியான்**
> **வீழ்குடி யுழவன் வித்துண் டாஅங்கு”**

**(புறம் -230:9-13)**

என்ற புறநானூறு பாடல் அடிகள் வழி அறிய முடிகிறது.

**வீரத்தை பாராட்டும் பண்புடையவர்**

இனக்குழு தலைவனின் வீரத்தை ஒழியாது பாடும் பண்புடையவர் அரிசில் கிழார். முந்தைய நாளில் தம் அண்ணனை இழந்த தம்பி ஒருவன் தம் அண்ணனை தாக்கியவனை தேடி வரும் காட்சியினை விளக்கும் பொழுது அவனுடைய தேடலின் விரைவு தன்மையினை விளக்கும் பொருட்டு கூறும் உவமை நயமிக்கதாகிறது. தம் அண்ணனை தாக்கியவன் தன்னை காக்கும் பொருட்டு கேடயம் மட்டுமின்றி ஆளையும் மறைக்கும் கல்லின் பின் என்றாலும் மீள முடியாது. அகலில் ஈட்ட குண்டுமணிகள் சுழல்வது போல கண்களை சுழற்றிக்கொண்டு பெரிய ஊரில் காய்ச்சப்பட்ட கள்ளைக் குடிக்க கலம் தேடி ஒவ்வொரு வீடாக அமைவது போல் அலைக்கின்றான் என குறிப்பிடுகின்றார் கண்களின் சுழற்சியும் கலம் தேடும் வேகமும் அண்ணனின் வீழ்ச்சிக்கு காரணமானவர்களை பிழைக்கச் செய்யாது என உணர்த்தும் விதமாக உவமைகளை கையாண்டு உள்ளார் புலவர். இதனை,

> **“துறுகன் மறையினு முய்குவை போலாய்**
> **நெருந லெல்லைநீ யெறிந்தோன் தம்பியே**
> **அகற்பெய் குன்றியில் சுழலுங் கண்ணன்**
> **பேரூ ரட்ட கள்ளிற்**
> **கோரில் கோரில் தேருமா னின்னே”**

**(புறம்-300:2-6)**

என்ற புறநானூறு பாடல் வழி அறிய முடிகிறது மேலும் புறம் 304 ஆவது பாடலில் தம்பியை இழந்த அண்ணனின் செயல்பாடுகளையும் அவனது வஞ்சினத்தையும் குறிப்பிடுகின்றார் புலவர். நடுக்கத்தை உடைய குளிரைப் போக்குகின்ற நாரால் வடிக்கப்பட்ட கள்ளைப்

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

பருகி காற்றை விட வேகமாகச் செல்லக்கூடிய வளப்பமான குதிரையை போருக்கு தயார் செய்கின்றான் வீரன் ஒருவன். நேற்று என் தம்பியை கொன்றவனையும் அவனது தம்பியையும் ஒருசேர நாளை போர் செய்து கொல்வேன் என கூறி பசித்த வயிற்றுக்கு உணவு அருந்தாதவனாய் பல குதிரைகளையும் பெரிதாக ஆராய்ந்து கொண்டிருக்கின்றான.; இதைக்கேட்ட பகை வேந்தனின் பெரிய பாசறையில் உள்ளோர் அவன் கூற்று பொய்யாகாதே என அஞ்சி நடுக்கத்துடன் உள்ளனர் என சகோதர அன்பினையும் அதன் வெளிப்பாடான வீரச் செயலையும் விளக்குகிறார் புலவர். இதனை,

**"எம்முன் தப்பியோன் தம்பியொடு ஒராங்கு**
**நாளைச் செய்குவன் அமர்எனக் கூறிப்**
**புன்வயிறு அடுத்தலுஞ் செல்லான் பன்மான்**
**கடவும் என்ப பெரிதே அதுகேட்டு"**

**(புறம்-304:5-8)**

என்ற பாடல் அடிகளால் அறியமுடிகிறது.

**மகட்பாற் காஞ்சி**

பெருவேந்தர்கள் இனக்குழு மக்களிடம் பெண் கேட்டு நிற்பதும் பெண்ணுடைய பெற்றோரும் உடன் பிறந்தோரும் தர மறுப்பதுமான செய்திகளைக் கொண்ட பாடல்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன. அவற்றுள் அரிசில் கிழார் பாடியுள்ள பாடலானது இனக்குழு தலைவனின் மனம் மற்றும் உடல் வலிமையினையும் அவனது குடியிருப்பு பகுதியின் வளமையினையும் பறைசாற்றி நிற்கின்றது. இதனை,

**"தண்பணைக் கிழவனின் தந்தையும் வேந்தரும்**
**பெறாமை யின்மையிற் பேரமர் செய்தலிற்**
**பிணம்பி றங்குபோர் அழிகளிறு எருதா**
**வாட்கை வைகலு முழக்கு**
**மாட்சி யிலரிவ டன்னை மாரே"**

**(புறம்-342:11-15)**

என்ற பாடல் வழி அறிய முடிகிறது பெண் தர மறுத்த தலைவனின் பெருமைகளை விளக்கம் இவ் பாடலில் வேந்தர் ஆகிய படைப்புறுக்கமுடைய வலியவனானாலும் சிறிதும் அச்சமின்றி மகளைத் தர மறுக்கும் வலிமை போற்றுதற்குரியதாக உள்ளது.

மருத நில தலைவனின் மகளை வேந்தரும் பெற முடியாமல் பெரிய போரினை செய்தனர். அப்போரில் இறந்தவர்களின் பிணக்குவியல் வைக்கோற் போராகவும் களிறுகள் அவ்வைக்கோற்போரை மிதிக்கும் எருதாகவும் ஆகுமாறு தம்முடைய வாளின் தன்மைக்கு ஏற்ப நாள்தோறும் போர் உழவினைச் செய்யும் ஆற்றல் உடையவர் இவளது உடன் பிறந்தவர் எனக் கூறுவதிலிருந்து மருத நிலத் தலைவனின் வலிமையினை உணர்த்துகின்றார் புலவர்.

இனக்குழு சமுதாயம் அரசு உரிமைச் சமூகமாக மாற்றம் பெறுவதற்கு முன்பே அரிசில் கிழார் வாழ்ந்துள்ளார். புறநானூற்றில் இவர் பாடிய ஏழு பாடல்கள் இடம் பெற்றுள்ளன இவ்வேழு பாடல்களிலும் பேகன், அதியமான் மற்றும் அவனது மகன் எழினி பற்றி மட்டுமே வெளிப்படையாக பெயர் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். மற்ற நான்கு பாடல்களிலும் இனக்குழு தலைவன் மற்றும் வீரர்களைக் குறித்தே பாடியுள்ளார். பெருவேந்தர்களைப் பாடாது இனக்குழுத் தலைவனையும் குறுநில மன்னர்களையும் பாடியுள்ளதால் இவர் வாழ்ந்த காலம் இனக்குழு சமுதாயம் முற்றிலும் மாறாத காலகட்டம் என்பதை உணர்த்துகிறது.

தம்மோடு வாழும் சக மனிதர்களின் வீரத்தையும் கொடையையும் இழப்பையும் இலக்கியமாக வடித்ததன் பண்பே அரிசில் கிழார் அறவழியில் வாழ்ந்த புலவர் என்பதற்கு சான்றாகிறது. சக மனிதர்களை மதித்து வாழும்

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

சான்றாண்மை குணம் உடையவராகவும் திகழ்கிறார்

**முடிவுரை**

புறநானூறு நூலில் இடம் பெற்றுள்ள அரிசில் கிழார் பாடல்களைக் கொண்டு அவரது பண்புகளையும் நன்றி மறவா மனிதநேயத்தையும் இல்லற மாண்பினை உணர்ந்த சான்றாண்மையையும் உணர முடிகிறது. தாம் வாழும் சமூகத்தில் தான் நன்றி கடம்பட்டுள்ள சக மனிதர்களை சமூக விழுமியத்தோடு மதிக்கும் பண்புடையவர் அரிசில்கிழார் என்பதை இதன் வழி அறிய முடிகிறது.

**அடிக்குறிப்பு**

1. நடராசன் தி.சு திறனாய்வுக் கலை, ரெயின்போ பதிப்பகம், சென்னை – 13. ப.166

**துணைநூற் பட்டியல்**

1. செல்வராசு.அ, புறநானூறு உரைவேறுபாடு, தொகுதி-1ரூ2, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை – 50, முதல் பதிப்பு ஏப்ரல் 2024.
2. பழனிச்சாமி.செ, புறநானூற்றில் தமிழர் பண்பாடு, வாணி பதிப்பகம், கோவை -11, முதல் பதிப்பு ஏப்ரல் 1989.